**நானாட்டான் பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 மே 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நானாட்டான் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இன் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் | இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகையில் காணி கட்டிடங்களாக காட்டப்பட்டுள்ள 21 காணிகளின் உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சபையின் காணிகளின் உரித்தை உறுதிப்படுத்தும் உறுதிகள் சபையில் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் | சபையின் ஆதனங்களுக்குரிய உரித்து ஆவணங்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| (i) இலக்கம் 371 | ரூபா 1,959,876 பெறுமதியான முற்பணங்கள் எட்டு தொடக்கம் பதினேழு ஆண்டுகளுக்கிடையில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்ய விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | உள்ளுராட்சி ஆணையாளரினால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது |
| (ii) இலக்கம் 571 | ரூபா 1,769,914 பெறுமதியான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளரால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் வருமான நிலுவை கடந்த ஆண்டில் ரூபா 3,440,096 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 7,096,901 ஆக இருப்பதனால் ரூபா 3,656,505 அதிகரித்துள்ளமை வருமான சேகரிப்பில் வினைத்திறனற்று உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2018 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2017 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரிகளும் வரிகளும் | 352,000 | 599,480 | - | 411,000 | 472,910 | - |
| ii. | வாடகைகள் | 14,194,766 | 17,373,534 | 862,160 | 6,352,055 | 5,666,244 | 668,476 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 585,000 | 554,457 | - | 670,000 | 575,769 | - |
| iv. | ஏனைய வருமானம் | 5,331,220 | 7,460,618 | 6,234,741 | 4,004,484 | 4,840,218 | 2,771,920 |
| | | **20,462,986** | **25,988,089** | **7,096,901** | **11,437,539** | **11,755,141** | **3,440,396** |

## 2.1.2 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரித்தான சந்தைக்கடை, தபால் கட்டடம் மற்றும் குத்தகைதாரரிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 221,560 நிலுவையினை அறவீடு செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஆய்வு உத்தியோகத்தர் மூலம்பரிசீலித்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2.1.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,398,170 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

(ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,332,553 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயம் பின்வருமாறு.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி திட்டமில் அமைச்சின் PFD/RED/01/04/2014/01 ஆம் இலக்க 17 பெப்ரவரி 2014 ஆம் திகதிய பொது நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய இருபது செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் அனுமதி பெறப்பட்டு இருக்கவில்லை | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளன. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 65 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 61 ஆகவும் உள்ளதுடன் சபையில் காணப்படும் 04 வெற்றிடங்களை நிரப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்எடுக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு வாகனங்களின் உரிமை மாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வாகனங்களை உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் பாதீட்டு செலவினம் ரூபா 42,449,037 ஆக இருந்தபோதும் உண்மைச் செலவினம் ரூபா 38,897,375 ஆக உள்ளதால் ரூபா 3,551,662 வேறுபாடானது வினைத்திறனற்ற பாதீடு தயாரித்தலை காட்டுகின்றது. | பாதீடு தயாரிக்கப்படும் போது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவிகளை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமல் இருக்க கூடிய கவனம் செலுத்தப்படும். |